132



மறைந்த தளபதி அஞ்சா நெஞ்சன்
அழகிரிசாமியின் நினைவு வெளியீடு.

OFFICE OF THE R... MADRAS
15 JUL 1949
SCANNED

# இன்பபுரி



விலை அணா 2

R34
N49
97339


132



மறைந்த மாவீரன் அஞ்சா நெஞ்சன்
அழகிரிசாமியின் நினைவு வெளியீடு.

OFFICE OF THE R... MADRAS
15 JUL 1949

# இன்பபுரி



விலை அணா 2

R34
N49
97339

சென்னையில் இருந்து விரைவில் வெளிவருகிறது!

# "எங்கள் நாடு"

(உயரிய தமிழ் தினசரிப் பத்திரிகை).

ராய்ட்டர், அசோஷியேடட் பிரஸ் முதலிய தந்திச் செய்திகளுடனும் மார்க்கட் நிலவரம், நிருபர்கள் செய்தி ளுடனும் அன்றாடம் வெளிவர ஏற்பாடு செய்யப்பட் ள்ளது.

சினிமா செய்திகளும் அறிஞர், கவிஞர் கட்டுரைகளும் ண்டு. வியாபார விளம்பரங்களுக்கு உயர்ந்த சாதனம்!

ஏஜண்டுகள் விவரத்துக்கு உடனே எழுதுங்கள்:

நெ. 2/11 மவுண்ட் ரோட், சென்னை 2.

---

**வாசு லாண்டரி ஒர்க்ஸ்,**

கீழச்சத்திரம் ரோடு,

**தென்னூர், திருச்சிராப்பள்ளி.**

ம்மிடம் கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு சுத்தமாகவும் குறிப் பிட்ட காலத்திலும் ஒழுங்காகஅழகாக சலவை செய்து கொடுக்கப்படும்.

ஒருமுறை பரீட்சை செய்து திருப்தியடையுங்கள்

புரோப்ரைட்டர்: **வாசு.**

---

அழகிய சினிமாக் குறிப்புகளுடன் வெளிவரும் உயரிய கலைப் பத்திரிகை.

# "மூவி டோ நியூஸ்"

ஆசிரியர்:

**T. D. சிவபுண்ணியம்,**

15-A, மலைக்கோட்டை, அரசமரத் தெரு,

**திருச்சிராப்பள்ளி.**

பெரியார் காட்டும்

# இன்ப புரி

★

(அதிகாரம்பெற்ற தொகுப்பு)

By


தி. மா. இராமலிங்கம்,

நெ. 12 B, காவல்கார தெரு,

தென்னூர், திருச்சி.



OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS 15 JUL 1949

132/3-4



உரிமை தொகுத்தவருக்கே.


விலை அணா 3

# ஒரு வார்த்தை

விருப்பு வெறுப்பு விடுத்து ஒன்றைச் சீர்தூக்கிப் பார்க்கும் பண்பு அவ்வளவு எளிதில்லை. சாதி, சமயம், அரசியல் ஏதாவது ஒரு துறையில் ஏதாவது ஒரு கட்சியில் பிரிந்துநின்று வாழ்வைப் பயிலுவது மனிதனுடைய வழக்கமாகப் போய்விட்டது.

பேச்சோ அல்லது எழுத்தோ அதை இயற்றுவோரை இணைக்காமல் பொருளைமட்டும் ஆராய்ந்து பயன்படுத்திக் கொள்வது இனிமேல் நம்மவர் பயிலவேண்டிய புதுவழி.

பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களுக்கு திருச்சி நகர சபையார் அண்மையில் (12-3-49 ல்) ஒருபெரும்வரவேற்பு அளித்து அவருடைய அறிவு நிறைந்த ஆலோசனைகளைப் பெற்றிருக்கிறார்கள். பெரியாரை வீரவணக்கம் புரிபவர்கள் இருப்பதுபோலவே அவர் பெயரைக் கேட்டாலே முகம் சுளிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதைப் பற்றிக் கவலைப்பட்டுப் பயனில்லை. சீர்திருத்த வாதியாரும் இந்தநிலைக்கு விலக்கல்லவே. காந்தியடிகளையும் வேம்பாக எண்ணிவெறுக்கும் சிலரும் இந்த நாட்டில் பிறந்துதானே இருந்தார்கள்!

பெரியாருக்கு நகரசபை அளித்த வரவேற்பு பேச்சுக்குப் பொருளான தொன்றுதான். இந்த வரவேற்பில் நகர சபை அங்கத்தினர்களுக்கோ, பொதுமக்களுக்கோ ஏற்பட்ட விருப்பு வெறுப்புக்கள் சாதாரணமான அரசியல் உணர்ச்சி சம்பந்தப்பட்டதுதான். ஆனால் பெரியார் அவர்கள் தனக்கு அளித்த வரவேற்புக்கு நன்றிகூறிப் பகர்ந்த பேருரை சமூக வாழ்வின் அடிப்படைத் தத்துவங்களை, விஞ்ஞானரீதியாக—சாஸ்திரீயமான முறையில் என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்—அலசிக்காட்டி அரிய உண்மைகளை நமக்குப் போதிக்கிறது.

97339

R64 N49.



பெரியார் சிறந்த சமூக சீர்திருத்தவாதி என்பதை மட்டுமே அறிந்திருக்கும் ஒரு சிலருக்கு-அந்தப்போக்கில் விருப்போ, வெறுப்போ அவர்கள் கொண்டிருந்தபோதிலும் சமூக யந்திரத்தைத் திறம்பட நடாத்த நகராண்மைக் கழகங்களுக்கு அவர் கூறியிருக்கும் ஆலோசனைகள்—பெரியார் சிறந்த ராஜரீக நிர்வாகத்திறனும் படைத்த மேதை என்பதை நன்கு உணர்த்தும்.

பெரியாரின் உரை இச்சிறு நூலில் தொகுக்கப்பட்டிருக்கிறது. அதை முழுதும் படித்துவிட்டுப் பிறகு சிந்தியுங்கள். "நகராண்மைக் கழகங்களுக்கு அரசியல் கட்சிகளின் பேரால் தேர்தல்கள் வேண்டுமா? சமூக ஊழியத்திற்கு சாதி, சமய அரசியல் கட்சிப் போராட்டங்கள் தேவைதானா?" என்று.

தென்னூர்,
14—3—49.

**தி. மா. இராமலிங்கம்.**

---


எமது கடையில் "மித்திரன்" "விடுதலை" "தினசரி" பத்திரிகைகளும் திராவிடநாடு, பொன்னி, கிளர்ச்சி முதலிய சஞ்சிகைகளும், குழந்தைகள் பத்திரிகைகள் பலவும், அறிஞர் அண்ணாதுரை, திருக்குறள் முனுசாமி இவர்கள் எழுதிய அரிய புத்தகங்களும் கிடைக்கும்.

அன்பர்களுக்கு அறிவு வளர்க்கும் பணியே எமது லட்சியம். பெரியாரின் பாக்கெட் காலண்டர்களும் எம்மிடம் கிடைக்கும்.

**வே. விசவனாதன்,**

நியூஸ் எஜெண்டு, தென்னூர், திருச்சி.

# பெரியாரின் பேருரை

"திருச்சி நகராண்மைக் கழகத்தார் என்னை வரவேற்று உபசரித்துப் பெருமைப்படுத்திய இச் சம்பவம் நானென்றும் மறக்க முடியாததாகும். இவ்வித வரவேற்புக்கும் பெருமைக்கும் நான் அருகனு என்று யோசித்தால் உண்மையில் நானே வெட்கப்படக்கூடியவனாக இருக்கிறேன். ஆனாலும் இங்ஙனம் வரவேற்பளிப்பது என்பது ஒரு வெறும் பத்ததியாக, சடங்காக வந்துவிட்டதால்தான் நகரசபையாரால் நானும் இன்று வரவேற்கப்படலானேன். மரியாதை முறையில் இந்த வரவேற்புக்கு நானும் நன்றி செலுத்துவதுடன் பதிலுக்கு ஏதேனும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும் என்பதும் சாதாரண முறையாகி விட்டது.

"முதலாவதாக நகராண்மைக் கழகம் பற்றி சில வார்த்தைகளைச் சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒரு காலத்தில் நானும் நகராண்மைக் கழகங்களில் தலைமைப் பதவி வகித்திருக்கிறேன். ஆதலால் நகராண்மைக் கழகம் சம்பந்தமாக எனக்கும் சிறிது அனுபவம் உண்டு. ஆனால் அந்தக் காலத்தில் நகராண்மைக் கழகங்கள் இருந்ததைவிட இன்று பெரிதும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. அந்த நாட்கள் நகராண்மைக் கழகங்களுக்கு இன்றைவிட அதிக மதிப்பும் அதிகாரங்களும் சுதந்திரங்களும் இருந்தகாலம்.

"அப்போதைய காலத்தில் நகராண்மைக் கழகத்திலே தலைவனாகவும் அங்கத்தினனாகவும் நான் இருந்துவந்தபோதும்கூட, காங்கிரஸ் கட்சியில் நானிருந்தபோதும்கூட, கட்சியின் பேரால், காங்கிரசின்பேரால் நகர சபைக்கு போட்டியிடுவது கூடாது என்றே சொல்லி வந்தேன். ஏன், அவ்விதம் சொன்னேன் என்றால், நகரசபைக்குக் கட்சி

தேவையில்லை, கட்சிக்கு நகர சபையினுள் வேலையில்லை என்பதால்தான்,—என்பதாக என் கருத்து அன்றும் இன்றும் இருப்பதால்தான்.

## கட்சிக்கு இடமில்லை

"நகரசபைகள் சட்டசபைகளைப் போலல்ல. சட்டசபைகளில் பல கட்சி அங்கத்தினர்கள் விவாதித்து நாட்டுக்கு நலன் தரும் சட்டம் செய்யவேண்டிய காரியம் இருக்கிறது; நகரசபைகளில் அவ்விதமல்ல. நகரசபைகள் சட்டசபைகள் நிறைவேற்றி வைத்த சட்டங்களை அவைகளின் விதிமுறைக்குச் சிறிதும் பிசகின்றி நடத்திக் கொடுக்கும் ஸ்தாபனங்களே அல்லாமல், நகரசபைகள் அங்கத்தினர்களின் விருப்பம்போல சட்[illegible] செய்வதற்கல்ல. நகரசபைகள் சட்டத்தை யோக்கிய[illegible]மாக நடத்திக் கொடுப்பதற்கு இருக்கின்றனவே [illegible] பிரியப்படி எந்த ஒரு காரியத்தையும் செய்வதற[illegible] இருக்கவில்லை.

"மாகாண சட்டசபையே மத்திய சர்க்காரின் சட்டசபையின் விருப்பம், நோக்கம், போக்கு அறிந்தே, எந்த ஒரு சட்டத்தையும் நிறைவேற்றவேண்டிய ஒரு நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. அப்படியாக, எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தாலும், அறிவாளியாக, படிப்பாளியாக இருந்தாலும்—சட்டசபை ஒருபுறமிருக்க—நகராண்மைக் கழகத்தில் அவர்கள் விருப்பம்போல எதையும் சாதித்துவிட முடியாது என்ற ஒரு அபிப்பிராயம் எனக்கேற்பட்டதாலே நகரசபை பொதுஜன சேவைக்குத் தேவையில்லை என்றுகூட கருதியவனானேன். வேண்டுமானால் நகரசபையில் அங்கம் வகிப்பது, கவுன்சிலர், வைஸ்சேர்மன், சேர்மன் என்பதாக லெட்டர்பாடில் அழகாக அச்சிட்டுக் கொள்ள உதவும்!

## ஊழல் ஏற்படுவதேன்?

“அதனாலேயே நகரசபையில் நான் வகித்து வந்த பதவியை அந்தக் காலத்திலேயே ராஜினாமா செய்துவிட்டு, தேசிய ஸ்தாபனம் என்ற காலத்தில் மதிக்கப்பட்ட காங்கிரசில் சேர்ந்து பணியாற்றினேன். நான் சேர்ந்த ஓராண்டு காலத்திலே நகரசபைத் தேர்தலில் நுழைவதென்று காங்கிரஸ் தீர்மானித்துப் பதவி ஏற்புப் பிரச்னை கிளம்பி காங்கிரஸ் பேரால் நகரசபைத் தேர்தலிற் போட்டியிடும் நிலைமை ஏற்பட்டது. காங்கிரசின் பேரால் நகரசபைக்கு ஆட்கள் எவரும் நிற்க வேண்டியதில்லை என்று நானும், என் கருத்தை ஆமோதித்த சிலரும் எதிர்ப்பிரசாரம் செய்தோம். இதன் காரணமாக எங்களுக்குள் சில கட்சி மனபேதமும் தோன்றியது. நகரசபைக்குள்ளும் இந்த பேதம் பரவியதன் பலனாக, பொது ஸ்தாபனங்களின் மதிப்பு குறைந்து நிர்வாகத்தில் குறைசொல்லும் அளவுக்கு ஊழல்கள் மலியவே நகராண்மைக் கழகத்தின் கண்ணியமும் உரிமைகளும் நாளுக்குநாள் மங்கி முடிவில் பறிக்கப்பட்டும் விட்டன.

“1920-ம் வருடத்துக்கு முன்பிருந்த நிலைமையையும் இன்றிருக்கும் நிலைமையையும் பார்த்தால் நகரசபைகளுக்கு எவ்வித அதிகாரமும் இன்று இல்லை என்றே தெரிகிறது. காங்கிரஸ் கட்சி, திராவிடகழகம், இந்துமகா சபை முதலிய எக்கட்சியானாலும், கட்சிகள் எல்லாவற்றிலும் நல்லவர்கள், நேர்மையானவர்கள் கண்ணியமானவர்கள் சிலரானுமிருப்பார்கள் அதனால்தான் நகரசபைக்குக் கட்சிவேண்டியதில்லை என்று கூறுகிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் பதவி பெற்றால்தானென்ன? நகரசபையில் கட்சி இருக்கவேண்டியதில்லை; சர்க்கார் ஏற்படுத்தியுள்ள சட்டத்தை நடத்துவதே நகரசபையின் வேலையாகிவிட்டதால், தேர்தலுக்குக் கட்சியைப் பிரயோசனப்படுத்தவேண்டாம் என்கிறேன்.

"கட்சியின் மூலம் ஒருவரை மற்றவர் விரோதிக்கவும் வெறுக்கவும் இடம் ஏற்படும். ஆதலால் நகரசபைக்கு அது வேண்டாம் என்றே கூறிவருகிறேன். கட்சி காரணமாக துவேஷமும் விரோதமும் புகுந்துவிட்டதால்தான், நகர சபைகளில் நலக்குறைவும் நாணயக் குறைவும் ஊழல்களும் ஏற்பட்டுவிட்டன. நகரசபைக்கு இன்றிருக்கிற உரிமை எல்லாம் என்னைப்போல நபர்களுக்கு வரவேற்பு கொடுப்ப தற்கும், எந்தக் கொடியை ஏற்றிவைக்கலாம், எந்தத் தலைவ ரது படத்தைத் திறந்து வைக்கலாம் என்று முடிவு செய் வதுதான் தவிற, அதுவும் கட்சிமாச்சரியம் காரணமாக பலத்த விவாதங்களுக்குப் பின்பு மெஜாரிட்டி கிடைத்து முடிவு செய்வதுதான் தவிற வேறெதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. (அதுவும் எனக்கு வரவேற்பு அளித்ததுகாரணமாக இந்த உரிமையும் இனி பறிக்கப் பட்டாலும் படலாம்!) இதனாலேயேதான் ஸ்தல ஸ்தாப னங்களின் பெருமை குறைந்துவிட்டது; நிர்வாக விஷயத் திலும் ஊழல்கள் நிரம்பிவிட்டன.

## எப்படி இதைப்பெற்றோம்?

" முதலாவதாக, நகரசபைகள் ஏன் பொதுமக்களின் பிரதிநிதிகளின் நிர்வாகத்தின் கீழ் வந்தன என்றால் வெளி நாட்டான், ஆங்கிலேயன் நம்மை ஆட்சி செய்துவந்தபோது என்றேனுமொருநாள் இந்தநாட்டை இந்த நாட்டு மக்களே ஆண்டுதானே தீரவேண்டும்., அந்தவிதமான ஒருகாலம் வந் தால், அவர்களுக்குப்போதுமான தகுதியும், பயிற்சியும் ஏற் பட்டிருக்க வேண்டாமா என்பதற்காக, கிராமப்பஞ்சாயத்து போர்டு, ஜில்லாபோர்டு, முனிசிபாலிடி இவைகளில் தேர்தல் அனுபவமும் நிர்வாக அனுபவமும் பெற பொதுமக்களின் பிரதிநிதிகளை அனுமதித்தான்.

துவக்கத்தில் அத்தகைய ஜில்லாபோர்டு முனிசிபாலிடி களில் இடம்பெறுவோர் எல்லோரும் அரசாங்கத்தாரால் நாமினேஷன் செய்யப்பட்டவர்களாகவே இருந்தார்கள்.

பிறகே, சிறுகச்சிறுகப் பொதுமக்களின் பிரதிநிதிகள் என்பதாக மேற்படி ஜில்லாபோர்டு முனிசிபாலிடிகளுக்கு அங்கத்தினர்கள் பெரும்பாலோருக்குத் தேர்தல் நடைபெற்று வந்து, சமீப காலத்திலேதான் பூரா இடங்களும் பொது மக்களின் பிரதிநிதிகள் என்பதாக தேர்தலில் வரநேர்ந்தது.

இவ்விதம் பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கென தேர்தல் வந்த பிறகு, மறுபடியும் மக்களில் சிலருக்கு அதிருப்தி ஏற்பட்டு நாமினேஷன் முறை இருக்கத்தான் வேண்டும், இல்லையேல் ஒரு சிலருக்கு பிரதிநிதித்துவம் இல்லையென்றும், நன்மைகள் எதையும் செய்யமுடியாது என்றும் ஒரு வித வெறுப்பு தோன்றியது. இந்த கூப்பாட்டின் பலனாக தேர்தலில் சில ஸ்தானங்களை ஒரு குறிப்பிட்ட வகுப்பு, லட்சிய மக்களுக்கென ஒதுக்கி வைப்பதென்ற முறையும் உண்டாக்கப்பட்டது. இதெல்லாம் நம்மை அன்னியன் ஆண்டகாலத்தில்.

## உரிமை அதிகாரம் வேண்டும்

இன்றுஎவ்வாறோ அன்னியன் விலகி, நாட்டு ஆட்சி நம்மக்களின் பிரதிநிதிகளின் ஆட்சியாகி விட்டதால், இனி பொதுமக்களின் பிரதிநிதிகள் என்பதாக ஜில்லாபோர்டு முனிசிபாலிடி இவைகளுக்கு இருக்கவேண்டியதில்லை. பொதுமக்களின் பிரதிநிதிகள் என்பவர்களே நாட்டை ஆளும்போது அந்த ஆட்சிக்குக்கீழிருக்கும் ஜில்லாபோர்டு முனிசிபாலிடிகளுக்கென பொதுமக்களின் பிரதிநிதிகள் எதற்கு? பொதுமக்கள் பிரதிநிதிகளுக்குள் பொதுமக்கள் பிரதிநிதிகளா? ஆகவே இனி ஆஸ்பத்திரி கோர்ட்டுகள் போலீசுகள் என்பவையெல்லாம் பொதுமக்களால் நடத்தப் படுதல்வேண்டும் என்று ஏற்பட்டால் ஒப்புக்கொள்ள முடியுமா? அதுபோல் பொதுஜன ஆட்சி கிட்டியபின்பு நகரசபை ஜில்லாபோர்டு முதலியனவும் ஏன் அரசாங்கப் பிரதிநிதிகளின் கீழ் இருக்கக்கூடாது?

உதாரணமாக ஜில்லா கலெக்டர் இன்று பொதுமக்களின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்று வைத்துக்கொள்ளுவோம்; அதுவும் அந்தக்கலெக்டருக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை என்றால், அவரால் எப்படி சரியான, நேர்மையான, நிர்வாகம் சாத்தியமாகும்? அதுமாதிரியாகவே, நகரசபை, ஜில்லாபோர்டு முதலிய ஸ்தல ஸ்தாபனங்கள் வெற்றிபெறவேண்டுமானால் அவைகளுக்கு கௌரவமும், நகரத்துக்கான நன்மைகளைச்செய்யும் உரிமைகளும் இருக்கவேண்டும். அவ்விதம் உரிமைகள் இருக்கச் செய்தால்தான் நகரசபையால் பல உருவான காரியங்களை நன்மைகளைச்செய்யமுடியும்.

"திருச்சி நகரசபையில்தான் நான் முதன் முதலாக வரவேற்பு பெறுகிறேன் என்று எண்ணவேண்டாம். ரஷ்யா உள்பட பல வெளிநாட்டு நகரசபைகளிலும் எனக்கு வரவேற்புகள் கிடைத்திருக்கின்றன. வெறும் தற்புகழ்ச்சிக்காக இதை நான் சொல்லிக்கொள்ளவில்லை; நகரசபைகள் பற்றிய அனுபவம் எனக்கு இருக்கிறது என்பதைக்குறிப்பிடவே கூறுகிறேன். பொதுத்தொண்டில் ஊக்கமும் உற்சாகமும் உள்ள பொதுஜனப் பிரதிநிதிகளுக்கு அவர்கள் மன விருப்பப்படி சேவைசெய்ய அதிகாரங்கள் வேண்டும்.

நிர்வாகத்தைச் சரிவர விருப்பு வெறுப்பின்றி நடத்த நல்ல வாய்ப்பும் தக்க சூழ் நிலையும் ஏற்பட்டுவிட்டால், வரி விதிப்பு இல்லாமலேகூட நிர்வாகத்தை நடத்த முடியுமே! ஒரு நகரசபை உண்மையில் நல்ல முறையில் ஆட்சிபுரிகிறதென்றால், அதில் வரியே தேவையா யிருக்கக்கூடாது. நகரசபையின் நிர்வாகம் முதலிய செலவுகளுக்கு வரி விதிப்பது என்ற முறை தவிர்த்து, வேறுபல வழிகள் பணம் சம்பாதிக்க இல்லையா?

## வரியில்லா நிர்வாகம்!

சர்க்காரைப் பொருத்தவரையில் இம்முறை வேறு விதமாக இருக்கலாம்; அதைப்பற்றி விவாதிக்க இங்கு

நேரமில்லை. ஆனால் நகரசபையைப் பொருத்தமட்டில் வரி பெறாமலே ஆட்சி செய்வது சாத்தியமானதுதான் என்று நிச்சயமாகச் சொல்லுவேன். நகரில் எத்தனையோ பெரிய கம்பெனிகள், தொழிற்சாலைகள் உள்ளன. அவைகளின் உற்பத்தி விற்பனை செலவு இவைகளைக் கணக்குப்போட்டு லாபத்தில் ரூபாய்க்கு இவ்வளவு என்று வரிவிதித்து வசூலித்தால், அந்தத் தொகையைக்கொண்டே, கள்ளமார்க்கட் கூட இல்லாமல் வரும் லாபத்தில், நகரசபையின் நிர்வாகத்தை நடத்தலாமே!

இன்னொரு வழியுமுண்டு ; சர்க்காரிடம் கடன் வாங்கி குடியிருப்புக்கு அவசியத் தேவைகளுக்குப் போதுமானவைகளாய் வீடுகளைக் கட்டிவிட்டால், அவைகளில் இருந்து கிடைக்கும் வருமானம் ஆரம்பத்திலே பிரமாதமாக இல்லாவிட்டாலும், நாளடைவில் வாங்கின கடனுக்கு வட்டியும் கட்டி நகரசபை நிர்வாகத்துக்கும் போதுமானதாகி கடன் போக எவ்வளவோ தொகை மிச்சம்கூட காணுமே !

வியாபாரத்துறையிலும் கூட முனிசிபாலிடி நல்ல பயன் பெறலாம். நகர மக்களுக்கான தேவைகளை அறிந்து கடைகளை முனிசிபாலிடி நடத்த முன்வரவேண்டும். இதனாலும் முனிசிபாலிடிக்கு நல்ல லாபம் கிடைக்கும் ; வியாபாரத்துறையில் கிடைக்கும் பல லட்ச ரூபாய் லாபத்தை ஏன் தனிப்பட்ட சிலருக்கு விடவேண்டும்? இதை முனிசிபாலிடியால் சாதிக்க முடியாதா ?

## தனி நபர் லாபம் பெறுவதேன் ?

உதாரணமாக, திருச்சிநகரசபைக்கு வேண்டியிருக்கும் வருஷம்பிரதி 31 லட்சம் ரூபாயையும் இத்தியாதி பல யந்திர வியாபாரத்துறைகளிற் கவனம் செலுத்தினால் கண்டிப்பாக சம்பாதித்துக்கொள்ள முடியும். தனி நபர்கள் மீது வரி விதித்துத்தான் பொருள் பெறவேண்டும் என்ற கட்டாய நிலை ஏன்? நகரமக்கள் தேவைப் பொருள்கள்

உற்பத்தி—விற்பனை, லாபங்களைத் தனிப்பட்ட மனிதர் ஏன் அடையவேண்டும்?

நகராட்சி முழுவதுமே முனிசிபாலிடியின் பொறுப்பின் கீழ் இருக்கவேண்டும். முனிசீப்—சப் ஜட்ஜு, மாஜிஸ்திரேட் கோர்ட்டுகள், போலீஸ் ஸ்டேஷன் இவைகளை எல்லாம் முனிசிபாலிடியே தகுந்த நபர்களை நியமனம் செய்து நடத்தக்கூடாதா? நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட என்கின்ற ஒரு சட்டசபை மெம்பருக்கு, பிரதிநிதிக்கு, 26 ஜில்லாக்களையும், பல அரிய இலாகாக்களையும், துறைகளையும் நிர்வாகம் செய்யும் திறமை இருக்கும்போது அத்தகைய பிரதிநிதிகள் நம் ஜில்லாவைமட்டும், நகரை மட்டும் நிர்வாகம் செய்யத் திறமையற்றவர்களாகி விடுவார்களா?

கூட்டுறவு, லேவாதேவி, வியாபார உற்பத்தி சங்கங்கள் இருப்பதால், எந்த ஒரு தனிப்பட்ட முதலாளியாவது கோபமோ வருத்தமோ அடைகிறுரு? கிடையாது; அதேபோல்தான் நகரசபை மேலே நான் கூறிய காரியங்களைச் செய்யும் விஷயத்திலும். நகரசபைக்கு அதற்கேற்ற வகையில் நாணயமாக ஆட்கள் கிடைக்காதா? நிச்சயம், நம்பிக்கையும், நாணயமும், திறமையும் உள்ளவர்கள் கிடைப்பார்கள்; தகுந்த அளவு பயிற்சிமட்டும் தேவை, அவசியமும்கூட. இதுவே ஸ்தல ஸ்தாபன சுயாட்சி ஆகுமே அல்லாது மற்றபடி வெறும் சட்டங்களை நடத்தி வைக்கக்கூடிய ஒரு சபையாக இருந்தால் அந்த நகரசபை எதற்குப் பயன்படும்?

அவ்வித சபையில் இடம் பெற்ற பொதுஜனப் பிரதிநிதிகளால் நகர மக்களுக்கு அவர்கள் நல்லது என்று கருதும் உருவான காரியங்களைத் துரிதமாகச் செய்ய முடியுமோ? வரியைக் குறைக்கவோ அல்லது உயர்த்தவோ, மேலதிகாரிகளின் சிபாரிசும் தயவும் உத்தரவும் வேண்டும் என்ற அளவுக்கு நிலைமை கொண்டுவந்து விடப்பட்டு விட்டது.

97339

## யார் பதவியில் இருப்பினும்...

நான் கேள்விப்படுகிறேன் ; இப்போது முனிசிபாலிடி களிலுள்ள செயல் அதிகாரி (Executive Officer) களைக் குறைத்துவிட்டு, அவர்களுடைய வேலைகளையும் பொது ஜனப் பிரதிநிதிகளிடமே ஒப்புவித்துவிடுவது என்பதாக சர்க்காரிடம் ஒரு யோசனை இருப்பதாக. ஆனால் அவ் விதம் அதிகாரங்களைப் பிரதிநிதிகளிடம் மாற்றிக்கொடுத்து விட்டு, பிரதிநிதிகளுக்குள்ளேயே கலவரம் ஏற்படக்கூடிய சூழ்நிலையையும் உண்டாக்கிவிடாது சர்க்கார் தக்க பாது காப்பு ஒழுங்கு முறைகளை வகுத்துச் செயலாற்ற வேண்டும்.

பொதுவாக நகரசபைகளில் கட்சிபேதம் தோன்றி ணலே நிர்வாகம் கண்டிப்பாக குழப்பமாகி ஊழல்கள் நிறைந்துவிடுகின்றன என்பது எனது பல ஆண்டுகால அனுபவமாகும். நகரசபைகள் சண்டைபிடிக்கும் இடமாக மாருமல் ஸ்தாபனம் உருவான காரியமாற்றும் இடமாக இருக்கவேண்டும். எந்தக் கட்சி பதவிக்கு வந்தால்தான் நமக்கென்ன ? காங்கிரஸ் பதவி பெற்றுல் என்ன, திராவிட கழகம் பதவி ஏற்றுல்தான் என்ன ? யார் பதவிக்கு வந்தா லும் நமக்கு கவலையில்லை. திராவிட கழகத்தான் பதவி ஏற்று தெருவைக் கூட்டினுல் அவன் கையிலுள்ள விளக்கு மாறு வேலை செய்யாதா ? அல்லது காங்கிரஸ்காரர் பதவி பெற்றுல் அவர்களுடைய விளக்குமாறு அதைவிட நன்முகக் கூட்டிவிடுமா ? நமக்கு வேண்டியதெல்லாம் நகரசபையின் அலுவல்கள் திறமையாக நடைபெறுதல்தான்.

மேலும் நகரசபைக்குள் கட்சி பிரவேசித்துவிட்டால், அதைத்தொடர்ந்து மதம் சாதிப்பிரிவினைகளும் புகுந்து விடுகின்றன. நகரசபை முழுவதும் ஒரே குழப்பமாகி விடுகிறது ; சர்க்காரும் இதையுணர்ந்து கட்சியின் பேரால் நகரசபைக்கு அல்லது ஜில்லாபோர்டுக்கு பிரதிநிதிகளை அனுமதிக்கவே கூடாது.

## வருவாய்க்கு வழிகள்

நகரசபையின் நிர்வாகத்தின் கீழ்க் குடியிருப்பு விடுதிகள், ஆபீசுகள், வியாபார தொழிற்சாலை காரியாலயங்கள் யாவும் கொண்டுவரப்பட்டு, நகர சபையே ஒரு கூட்டுறவு ஸ்தாபனமாகிவிட்டால், லாப நஷ்டம் நகர மக்களுக்கென ஆகும் நிலைமை ஏற்பட்டால்தான், உண்மையில் நமக்கு ஸ்தல ஸ்தாபன சுயாட்சி கிட்டியதாகும். தனிப்பட்ட நபர்களுக்குப் பாதகம் அல்லது இடைஞ்சல் செய்ய வேண்டும் என்பதுமில்லை. நான் சொல்லிய குடியிருப்பு விடுதிகள், வியாபார இடங்கள் முதலியவைகளை அமைத்துக்கொடுத்து அவைகளின் வாடகை மூலமாகப் பணம் திரட்டவேண்டும் என்ற நோக்கம் நகரசபைக்கு இருந்தால் நகரையடுத்து உள்ள காலியிடங்களைப் பயன்படுத்திக் கொண்டு, அங்கே வியாபாரம் செய்பவர்களுக்குத்தான் லைசென்சு வழங்கப்படும் என்றால், மக்கள் நகரசபை விரும்பும் இடத்துக்கே செல்லுவார்கள்; நகரம் விஸ்தரிப்படைவதுடன், சுகாதார வசதிகளும் மிக்கதாகும்; வசதிகள் பெருக, வருவாயும் நகரசபைக்கு இயல்பாக அதிகமாய் விடும்.

இன்று நாட்டு மக்களுக்குப் பஞ்சமும் கொந்தளிப்பும் விலைவாசி உயர்வும் ஏற்பட்டுள்ளன என்றால், நாட்டிலே வியாபாரம் ஒழுங்கீனமாக, தனிப்பட்டவர்களின் ஆதிக்கத்தின் கீழ் நடைபெற்றுவந்ததே காரணமாகும். மக்கட்குத் தேவையான அளவு உணவு, உடை இருப்பிடம் முதலிய இன்றியமையா வசதிகள் கிடைத்துவிட்டால், கிடைக்கவழி செய்யப்பட்டுவிட்டால், அதையே சோஷலிஸம், ரஷ்யா மோட்சம், சொர்க்கம் என்றெல்லாம் சொல்லுகிறோம்.

முனிசிபாலிடியையே கூட்டுறவுச் சங்கம் என்று பேர் மாற்றிவைத்துக்கொண்டு வேலை செய்தால்கூட, அதனால் ஒன்றும் பாதகம் ஏற்பட்டுவிடாது. நகரசபைக்கு மதிப்

பில்லாது போவதற்குக் காரணம் நகர சபையின் நிர்வாகம் பொறுப்பில்லாமல் ஊழல்களுடன் நடைபெறுவதுதான். திருச்சி நகரசபை அவ்விதம் எல்லாம் இல்லாது நகரசபை உறுப்பினர்கள் அனைவரும் ஓரளவுக்கேனும் ஒத்து இயங்கு வதுகாண மகிழ்ச்சியடைகிறேன்; நகரசபையினரையும் அதற்காகப் பாராட்டுகிறேன்.

## நடு நாயக நகர்—திருச்சி.

திராவிடநாடு என்றோ, தமிழ்நாடு என்றோ எதிர் காலத்தில் இந்திய உபகண்டத்தில் இருந்து எவ்விதமாக பிரிக்கப்பட்டாலும் திருச்சிமாநகரம் தென்னிந்தியப் பகுதி களுக்கு எல்லாம் நடு நாயகமாக விளங்கும் இடம். இத் தகைய திருச்சியின் நகரசபை நான் மேலே கூறிய முன் னேற்ற வேலைகளை எல்லாம் ஏன் செய்து பார்க்கக்கூடாது? முடியாதா, முடியாதவைகளா? அந்தந்த ஊர் அதனதன் தேவைகளை ஆங்காங்கு உற்பத்திசெய்து சுயதேவை பூர்த் திக்கு ஏன் வசதிகளைச் செய்துகொள்ளக் கூடாது?

தேர்தல்களின்போது கட்சி கூடாது என்றேன்; ஏதோ, கட்சியின் பேரால் போட்டியிட்டு வெற்றிபெற்றாய் விட்டது என்று வைத்துக்கொள்ளுவோம். நகரசபை மண்டபத்துக்குள் பிரவேசித்த பின் கட்சிபேதம் ஒழித்து, அங்கத்தினர்கள் யாவரும் ஒரு குடும்பத்தினராக இருக்க வேண்டும். நகரசபை ஒரு கூட்டுறவு சங்கம் மாதிரியாக நடைபெற்றால்தான், நகரசபைக்கு வருமபடி பெருகும்.

தனிப்பட்ட நபரை ஏன் நாடக, சினிமாக் கொட்ட கைகள் கட்டி கொள்ளைலாபமடிக்க அனுமதிக்கிறீர்கள்? அந்தக் கொட்டகைகளில் அவர்களுடைய சொந்தக் காரர்கள்மட்டும் வந்து பணம் கொடுத்துப் போகிறார்களா? பொதுமக்கள் எல்லோரும் தானே வந்துபார்த்து பணம் சேருகிறது? அப்படியாக அந்தக் கொட்டகைகளினால் கிடைக்கும் லாபத்தை ஏன் தனிப்பட்ட நபருக்கே அனு

மதிக்க வேண்டும்? ஒரு நபரை இவ்விதம் லாபமடிக்க விட்டுவிட்டு, பின் நகர சபையின் நிர்வாகத்துக்கும் இதர செலவுகளுக்கும் பொதுமக்களே ஏன் வரிபோட்டு வாதிக்க வேண்டும்? இதனால் நான் ஏதோ தனிப்பட்ட முதலாளிகள் மீது துவேஷம் அல்லது பொருமை காரணமாகக் கூறுவ தாகக் கருதாதீர்கள். நகரசபைக்கு இவ்விதமான வழிகள் மூலம் ஏராளமான லாபம் நாளொன்றுக்குக் கிடைக்கும் என்பதை எடுத்துக்காட்டவே சொல்லுகிறேன்.

* * *

என்னை இவ்வளவுதூரம் அன்புகாட்டி வரவேற்று உபசரித்த திருச்சி நகரசபைத் தலைவர், டாக்டர் எட்வர்டு பால் மதுரம், உபதலைவர், அங்கத்தினர்கள், இவர்களுடன் ஒத்துழைத்த இதர நண்பர்கள், இவ்வளவு நேரம் என்னுடைய பேச்சை பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த அன்பர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். திருச்சி நகரசபையார் என்னை இன்று இவ்வளவுதூரம் வரவேற்று பெருமைப் படுத்தியது அவர்கள் என்பால் கொண்டுள்ள பேரன்பு காரணமாகவே அல்லாமல், அவர்களுடைய வரவேற்புக்கும் உபசரிப்புக்கும் நான் தகுதியுடையவன் என்றல்ல என்று கூறிக்கொண்டு இத்துடன் என் பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன். யாவருக்கும் வணக்கம்,

பெரியார் பேசியமர்ந்ததும், நகரசபைத் தலைவர் டாக்டர் எட்வர்டுபால் மதுரம் அவர்களின் உத்திரவுப்படி, நகரசபை அங்கத்தினர் என். சங்கரன் பெரியாருக்கும் விழாவுக்கு ஒத்துழைத்த தோழர்களுக்கும், பொதுமக்க ளுக்கும் நகரசபையின் சார்பாக நன்றியறிதல் கூறினார்.

———

# பெரியாரின் நகைச்சுவை!

திருச்சி வரகனேரி ஆனந்தபுரத்தில் இருக்கும் பாரதிதாசன் படிப்பகத்து ஆண்டு விழாக் கூட்டத்தில் 13-3-49 ஞாயிறு மாலை பெரியார் ஈ. வே. ரா. பேசுகையில் அறிவிலிகள் சிலர் பன்றி ஒன்றைக் கூட்டத்துள் விரட்டிவிட்டுக் கலாட்டாசெய்ய முயற்சித்தனர். சொற்ப ஆரவாரத்திற்குப் பின் கூட்டம் அமைதியடைந்து பெரியார் தொடர்ந்து பேசுகையில் "திராவிட கழகத்தார் மட்டுமே கடவுள் நம்பிக்கையற்றவர்கள், நாஸ்தீகர்கள் என்று சொல்லப்படுகிறார்களே! அது சரியா? இக் கூட்டத்தில் உள்ளவர்கள் எல்லோரும் திராவிட கழகத்தினர் அல்ல என்பதும் அறிந்த விஷயமே! அப்படியாக இப்போது நம்மிடையே பகவான் மகாவிஷ்ணு (வராகவதாரத்தில்) எழுந்தருளினாரே; யாராவது மதித்து வரவேற்று வணங்கினார்களா? எல்லோரும் நாஸ்தீகர்கள் என்றுதானே அர்த்தம்! திராவிட கழகத்தினரை மட்டும் வாய் கூசாது நாஸ்தீகர்கள் என்கிறார்கள், நியாயமோ அர்த்தமோ இல்லாத பேச்சு!" என்று குறிப்பிட்டார். கூட்டத்திலிருந்தோர் அனைவரும் கொல்லென்று சிரித்து கைதட்டி ஆரவாரித்தார்கள்.

*மேலும் அவர் பேசியதை அடுத்த வெளியீட்டைப் பாருங்கள்.*


# T. D. VEERAPPA

*Direct importers of:*

Belgium Looking Glasses, ¼″ 3/16″ & ⅛″ Glass Sheets; Colour Glasses, Roofing Glasses of all sizes and designs; Window Glass Cases of all sizes.

Both retail and whole sale dealers of above. Frame Works undertaken; frames of all designs and thickness,

*Can be had at:*

97339

340, BIG BAZAAR, TIRUCHI.

தமிழ் நாட்டின் முக்கிய நகரங்கள் எங்கும்
இப்போது திரையிடப்பட்டு வருகிறது.

# வைனதேயனின் 'விநோதினி'

(உயர்ந்த தமிழ் படம்)

**கள்ள மார்க்கட்காரர்களின் உள்ளம், காதல், வீரம், சிங்காரம்,
நகைச்சுவை ஆகிய பல உணர்ச்சிகளைச் சித்தரிக்கும் அரிய படம்.**

உங்களூருக்கு வரும் நன்னாளை எதிர்பாருங்கள்!

- N கிருஷ்ணமூர்த்தி
- கோளத்துமணி,
- V. S. மணி,
- ஸ்டண்ட் சோமு,
- தனலெக்ஷ்மி,
- லலிதா & பத்மினி.

ஆகியோர் நடித்தது



## G. S. குப்புசாமி செட்டி,

மக்காஜிசௌக், மைசூர்.

குணத்தில் சிறந்தது!

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றது!!

# "ரேடியோ பீடி"

(ரிஜிஸ்டர் நெ. 90990)




**ஏஜண்டுகள் இல்லாத ஊர்கட்கு ஏஜண்டுகள் தேவை**

விவரங்களுக்கு எழுதவும்:

| விற்பனை டெப்போ: | பாக்டரி: |
|---|---|
| 297, பெரியகடைவீதி, | அல்லிமால் தெரு, |

**திருச்சிராப்பள்ளி.**

...கூடம். சின்னக்கடைத் தெரு, திருச்சி.—8-4-49.